# உரையாடல் - 4

**பங்குபெறுபவர்கள் :- அம்மா,மகள்**

அம்மா : செல்வி நாம் கோவிலுக்குச் செல்வோமா?
மகள் : சரிம்மா, எந்த கோவிலுக்குச் செல்கிறோம்.
அம்மா : முருகன் கோவிலுக்குச் செல்வோம்.
மகள் : அம்மா நான் புறப்பட்டு விட்டேன்.
அம்மா : சரி, வா செல்லலாம்.
மகள் : அம்மா, கோவில் மிகவும் அழகாக உள்ளது.
அம்மா : ஆமாம். செல்வி கோவில் மிகவும் அழகாக உள்ளது.
மகள் : அம்மா எனக்கு ரோஜா பூ வேண்டும்.
அம்மா : சரி, வாங்கிக் கொள்.
மகள் : அம்மா, சாமி சந்தன அலங்காரத்தில் அழகாக இருக்கிறார்.
அம்மா : இறைவன் எப்பொழுதுமே அழகு தான்.
மகள் : அம்மா இப்பொழுது எங்கே செல்கிறோம்?
அம்மா : எதற்கு கேட்கிறாய்.
மகள் : அம்மா கடைகளுக்குச் செல்வோமா?
அம்மா : சரி, உனக்கு என்ன வேண்டும்.
மகள் : அம்மா, எனக்கு கம்மல், வளையல் வேண்டும்.
அம்மா : வா, வாங்கலாம்.
மகள் : அம்மா எனக்கு ஒரு கைப்பை வேண்டும்.
அம்மா : இன்னொரு நாள் கைப்பை வாங்கலாம்.
மகள் : அம்மா எனக்கு இளநீர் வேண்டும்.
அம்மா : வா, குடிக்கலாம்.
மகள் : அம்மா இளநீர் சுவையாக உள்ளது.
அம்மா : சரி, வீட்டிற்கு செல்வோமா?
மகள் : சரிம்மா.